**இலங்கை கைப்பணிகள் சபை 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை கைப்பணிகள் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை கைப்பணிகள் சபையின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

பின்வரும் சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிட பெறுமானத்தேய்விற்காக போதிய பெறுமானத்தேய்வுச் சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் இது நேர்கோட்டு முறைமையின் பிரகாரம் சொத்துக்களின் 1% ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார் வாகனங்களின் கிரயம் ரூபா 4,955,347 ஆக இருந்ததுடன் 2009 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இதன் பெறுமதி பூச்சியமாக இருந்தது. இந்த மோட்டார் வாகனத்தினை மீள்பெறுமதியிட்டு மீளாய்வாண்டில் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒவ்வொரு ஆண்டுகளுக்குமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்ற நிதிசார் விளைவுகளுக்கு முன்னைய ஆண்டுகளுக்காக செம்மையாக்கல்கள் செய்வது தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றது. 2001 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்பட்ட கடந்த ஆண்டுகளுக்கான செம்மையாக்கல்களை கவனத்தில் எடுத்துக்கொள்ளும் போது ரூபா 1.5 மில்லியனிலிருந்து ரூபா 13 மில்லியன் வரை செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருந்தும் அவற்றினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) கணக்குகளில் விடுபாடுகள்

(i) பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் எழுதுகருவிகளின் இருப்பு மீதி ரூபா 273,616 ஆக இருந்ததுடன் இது இறுதிக் கணக்குகளில் விடுபட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியளவில் பொறியியல் பிரிவினது ரூபா 3,047,000 பெறுமதியான சொத்துக்கள் இறுதிக் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iii) சிரப் நிதியத்திலிருந்து கிடைத்த 29 கணனிகளின் பெறுமதியினைக் கணித்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iv) நிலுவையான கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 2,923,077 ஆக இருந்ததுடன் இது கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(v) தரும நிதியத்தில் ரூபா 6,000,000 மில்லியின் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 747,000 தொகையான முதலீட்டு வருமானம் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் மீளாய்வாண்டிற்கான வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 4,889,001 ஆக இருந்ததுடன் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளை மிகைத்த கடன்பட்டோரின் அளவு ரூபா 3,596,424 ஆக இருந்தது. இக்கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 18,158,776 ஆக இருந்ததுடன் இதில் ஒரு ஆண்டினை மிகைத்த அளவு ரூபா 7,065,433 ஆக இருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| தொடர்பு | விபரம் |
| --- | --- |
| (அ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி) | |
| (i) நி.பி 133(2) | இலங்கை கைப்பணிகள் சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மீளாய்வாண்டின் போது எதுவித கணக்காய்வு ஐய வினாக்களையும் வழங்கியிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371(5) | உத்தியோகத்தர் ஒருவர் பெற்றுக்கொண்ட முற்பணங்கள் அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2009 - 2010 ஆண்டுகளில் பெற்றுக்கொண்ட ரூபா 99,235 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) நி.பி 446 | | (i) காசேட்டின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பிரகாரம் காசேடுகள் நாளாந்தம் பேணப்பட வேண்டியதுடன் நாளாந்தம் சமப்படுத்தப்பட்டு பொறுப்புள்ள மேற்பார்வையாளர் அல்லது நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரினால் காசேட்டில் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) சபையின் கட்டுபெத்த தச்சுவேலை பயிற்சி நிறுவனத்தில் 2010 சனவரியிலிருந்து திசெம்பர் வரை ரூபா 560,925 கூட்டுமொத்தமான பணம் ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) சுற்றுநிருபம்

---------------------

| | |
|---|---|
| (i) 1998 யூன் 02 ஆந் திகதிய பீஈ/000/6(படிகள்) அலகு தற்காலிகம் ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் | சபையின் தலைவரினைத் தவிர்த்து ஏனைய எந்த உத்தியோகத்தரும் கடமை அல்லது தனிப்பட்ட உபசரணை விலைப்பட்டியல்களை மீளளிப்புச் செய்ய முடியாது என்ற போதிலும் அதற்கு முரணாக சபையின் முகாமைத்துவ பணிப்பாளரும் நிறைவேற்று பணிப்பாளரும் (நிர்வாகம்) முறையே ரூபா 38,723 மற்றும் ரூபா 10,472 தொகைகளினை மீளளிப்புச் செய்திருந்தனர். |
| (ii) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ 2009/(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றுநிருபம் | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் மீதி ரூபா 169,400,402 ஆக இருந்ததுடன் அதற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 நிதி மீளாய்வு

---

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 6,034,558 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,947,465 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகள் ரூபா 12,982,023 ஆல் முன்னேற்றமடைந்திருந்தது. பொறியியல் பிரிவு உழைத்திருந்த ரூபா 15,566,727 தேறிய வருமானம் நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---

#### 2.2.1 செயலாற்றல்

---

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தின் பிரகாரம் நடைமுறை விகிதம் (நடைமுறைச் சொத்துக்கள் : நடைமுறைப் பொறுப்புக்கள்) 2:1 ஆக உள்ள போதிலும் சபையின் நடைமுறை விகிதம் மீளாய்வாண்டின் போது 0.73:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டில் 0.75:1 ஆக இருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது லக்சல கோட்டை மற்றும் ஏனைய கிளைகளின் இலக்கிடப்பட்ட விற்பனைகள் 24% இலிருந்து 85% வரையான வீச்சில் உள்ளபடியான விற்பனைகள் குறைவடைந்திருந்தன.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது மொத்த விற்பனை வருமானம் ரூபா 131,320,505 தொகையாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 224,292,147 ஆக இருந்தது. இதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த விற்பனை வருமானம் ரூபா 92,971,642 ஆல் அல்லது 71% ஆல் முன்னேற்றமடைந்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான ஏற்றுமதி வருமானம் ரூபா 773,401 ஆல் அல்லது 118% ஆல் முன்னேற்றமடைந்திருந்தது.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசகர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்கு ரூபா 30,000 வீதம் மாதாந்தப்படி செலுத்தப்பட்டிருந்தும் கடமைப் பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட்டிருக்காததனால் செயலாற்றலினை மதிப்பீடு செய்யமுடியாதிருந்தது.

(ஆ) 2010 ஒக்டோபர் 13 ஆந் திகதியிலிருந்து 22 ஆந் திகதி வரை சீனாவில் இடம்பெற்ற கென்டன் வியாபாரக் கண்காட்சிக்காக சபையின் மூன்று உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்ததுடன் அதற்காக சபையினால் ரூபா 543,105 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இக் கண்காட்சியில் காட்சிப்படுத்துவதற்காக எதுவித பொருட்களும் எடுத்துச் செல்லப்படாதிருந்ததுடன் விற்பனை மேம்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) பம்பலப்பிட்டி லக்சல காட்சி மண்டபத்தினை விற்பனை செய்வதற்கு தொடர்புபட்ட உச்ச கேள்வி மனுவாகிய ரூபா 4,200,000 தொகைக்கு விலை தீர்மானிக்கப்பட்டு தனியார் தரப்பினரிடமிருந்து ரூபா 2,100,000 முற்பணம் 2009 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தின் உரிமையினை மாற்றிக்கொடுப்பதற்கும் மிகுதிப் பணமாகிய ரூபா 2,100,000 தொகையினை அந்த நபரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய அருங்கலைகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட அருங்கலைப் பயிற்சிப் பிரிவின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் உரிய முறையில் ஒப்படைத்தல் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 15 ஆண்டு காலமாக எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாத 14 ஆயுத விடயங்களின் கீழ் 296 உபகரணங்கள் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டன.

(ஆ) புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்ததன் காரணமாக தொடர்ந்தும் பயன்படுத்தக்கூடிய ஆனால் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட 08 தச்சுத்தொழில் இயந்திரங்கள் 05 ஆண்டுகள் காலமாக களஞ்சியங்களில் வைத்திருக்கப்பட்டதுடன் அவற்றினைப் பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காலி லக்சல வளவில் அமைந்துள்ள 600 சதுர அடி அளவான கட்டிடம் 2009 ஆம் ஆண்டின் பின்னர் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட வில்லை.

### 2.2.4 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லக்சல தலைமை அலுவலகத்தின் பெற்றிக் பிரிவில் ரூபா 119,580 தொகையான பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தன.

(ஆ) சபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பங்களிப்பு பணத்தினை உரிய திகதியில் செலுத்தமுடியாதிருந்தமையின் காரணமாக ரூபா 1,497,331 தொகையான மிகைக் கட்டணத்தினைச் செலுத்தவேண்டி ஏற்பட்டது.

(இ) உள்ளூராட்சி சபைக்கு வருடாந்தம் செலுத்தவேண்டிய வரிப்பணத்தினை உரிய திகதியில் செலுத்தமுடியாதிருந்ததன் காரணமாக ரூபா 655,640 தொகையான மிகைக் கட்டணத்தினை மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டி ஏற்பட்டது. இப்பணம் அட்டுறுச் செலவினத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

பாதீட்டுத் தரவுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்குமிடையே 23% இலிருந்து 349% வரையான முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு செயற்திறனான பாதீட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஆ) முற்பணக் கொடுப்பனவும் தீர்த்துவைத்தலும்

(இ) உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல், பணம் செலுத்துதல், சந்தைப்படுத்தல் என்பன.

(ஈ) விற்பனை/ மீளப் பெறுவனவுகள்/ கடனுக்கு விற்பனைகள்/ ஏற்றுமதி விற்பனைகள்

(உ) நிதி முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாடும்

(ஊ) உரிய சட்ட ஏற்பாடுகளைக் கடைப்பிடித்தல்

(எ) ஏடுகள் கோவைகள் என்பவற்றைப் பேணுதல்.

(ஏ) கணக்கீடு